OS 186/2018

பி.வா.சா.1 முனியாண்டி த/பெ மொளையான்

நாள் 23.03.2026

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். மற்ற பிரதிவாதிகள் எனது உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி முனியம்மாள் எனது சகோதரி அவர் இறந்துவிட்டார், அவரது கணவரும் இறந்துவிட்டார், அவர்களுக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். மற்றும் ஒரு சகோதரர் பாபு என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பாபுவிற்கு திருமணம் ஆகவில்லை என்றாலும் அவருக்கு சந்ததிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் மற்றும் இதர சொத்துகளை நானும் எனது உடன் பிறந்த சகோதரர்களும் 19.02.2010ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். வழக்கு சொத்து பாகப்பிரிவினையில் இறந்த எனது சகோதரர் பாபு என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பாபு இறக்கும் வரையில் அவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் எனது சகோதரர் பாபுவின் கையொப்பம் என்றால் சரிதான். எனது சகோதரர் ரூ.30 ஆயிரத்திற்கு தாவா சொத்தை பெருமாள் என்பவருக்கு அடமானம் போட்டார் என்றால் அடமானம் போட்டார் பணம் கொடுக்கவில்லை சாராயம் ஊத்தி கொடுத்து கையொப்பம் வாங்கி விட்டார்.

2. சாராயம் ஊத்தி கொடுத்து அடமானம் பத்திரத்தில் கையொப்பம் பெறப்பட்டதாக எனது எதிர்வழக்குரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் விவரம் சொல்லாமல் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பெருமாள் என்பவர் எனது மற்றொரு சகோதரர் என்றால் சரிதான். பெருமாளுக்கும் பாபுவிற்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். எனக்கும் பாபுவிற்கும் பெருமாளுக்கு எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7ல் உள்ள் கையொப்பம் பெருமாளின் கையொப்பம் என்றால் சரிதான். பெருமாள் அடமானக்கடன் அசல் மற்றும் வட்டியை வாதி சுரேஷிடம் இருந்து பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்த மேடோவர் பத்திரம் என்றால் சரிதான். பாபு இறந்த பிறகு அடமானக்கடனை பைசல் செய்யும் படி பெருமாள் கடந்த 02.01.2018 தேதியில் எனக்கும் எனது மற்ற சகோதரர்களுக்கும் வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நானும் தங்கவேலு, சின்னாப்பா ஆகியோர் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு 09.01.2018 தேதியில் வா.சா.ஆ.6 அனுப்பினோம் என்றால் சரிதான்.

3. நாங்கள் சொன்ன விவரத்தின் பேரில் தான் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பில் பாகப்பிரிவினை பத்திரம் எழுதுவதற்கு பாபு பெருமாளுக்கு ரூ.5 ஆயிரம் வாங்கியதற்காக அடமானக்கடன் ஆவணம் எழுதப்பட்டதாக விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாபு சந்ததி இல்லாமல் இறந்துவிட்டதால் எனது சகோதரி முனியம்மாள் தவிர மற்ற 2 முதல் 4 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். பெருமாள் வாதி மேடோவர் எழுதி கொடுத்த பிறகு வாதி தனது வழக்கறிஞர் மூலம் 16.04.2018 ம் தேதி எனக்கும் எனது சகோதரர் பெருமாளுக்கும் வா.சா.ஆ.8 அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்புக்கு நாங்கள் பதில்

அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மற்ற சகோதரர்களுக்கும் சேர்த்து நான் தான் வழக்கு நடத்துகிறேன் என்றால் சரிதான்.

4. குடும்பத்டதில் நான் தான் மூத்தவர் என்றால் சரிதான். பாபுவிற்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட தாவா சொத்தை பாபு இறந்த பிறகு நானும் மற்ற சகோதரர்களும் அனுபவித்து வருகிறோம் என்றால்சரிதான். பாபுவின் சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதால் பாபுவின் தாவா கடனை நாங்கள் தான் பைசல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகும் நாங்கள் கடனை பைசல் செய்யாததால் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை செலுவுத்தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.